நல்லூர் [illegible] நூலகம்
[illegible] யாழ்ப்பாணம்

Registered as a News Paper பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 04 [17 - 3 - 1993] புதன்கிழமை ஓசை 27

## யாழ். வைத்தியசாலையில் ஏற்பு ஊசி தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியில் ஏற்புத் தடுப்பூசிமருந்தின்றி நோயாளர் அவதியுறுகின்றனர். இந்த ஊசி மருந்து ஏற்றப்படவேண்டிய நோயாளர்களுக்கு மருந்து தீர்ந்துவிட்டதாகவும் வெளியில் வாங்கி வந்தால் போட்டு விடுவதாகவும் ஊசி மருந்தேற்றும் பகுதியில் கூறப்படுகின்றது. இதனால் இந்த ஏற்புத் தடுப்புசி மருந்தினை தனியார் மருந்தகங்களில் கூடுதல் விலைகொடுத்து வாங்கவேண்டிய நிலை நோயாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதேவேளை இம்மருந்தை வாங்குவதற்குப் பணமின்றி பலர் திரும்பிச் செல்வதையும் காணமுடிகின்றது. இதுபற்றி வினாவியபோது இம்மருந்து முடிந்து பல நாட்களாகிவிட்டதாக தெரிவிக்கப்பட்டது (சி) (நி)

# மாகாண சபைகள் கலைப்பு; மூன்று மாதத்திற்குள் தேர்தல்

[கொழும்பு]

சிறிலங்காவில் இயங்கி வந்த ஏழு மாகாண சபைகளும் நேற்று விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கலைக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இம் மாகாண சபைகளுக்கான தேர்தல், மூன்றுமாத காலத்தில் நடைபெறவுள்ளதாகவும் அறியவருகினறது. ஆயினும் தேர்தலுக்குரிய திகதி இன்னும் அரசால் அறிவிக்கப் படவில்லை.

1987-ம் ஆண்டு ஏற்பட்ட இந்தியா - சிறிலங்கா சமாதான உடன்படிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு மாகாணத்திற்கும்ஒருமாகாண சபை உருவாக்கப்பட்டதும், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு ஒரு மாகாண சபையாக உருவாக்கப்பட்டதும் தெரிந்ததே.

ஆனால் 1990-ல் வடக்கு, கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது. அதன் பின்னர் இச்சபை இயங்கவில்லை.

ஏனைய ஏழு மாகாணசபைகளும் இயங்கிவந்தன. இந்த ஏழு மாகாணசபைகளுமே தற்பொழுது கலைக்கப்பட்டுள்ளன.

இந்த ஏழு மாகாண சபைகளினதும் முதலமைச்சர்களின் சிபார்சுக்கு அமைய மாநிலங்களின் கவர்னர்கள் மாகாண சபைகள் கலைக்கப்படுவதற்கான பிரகடனங்களை வெளியிட்டனர்.

எல்லா மாகாண சபைகளுக்கும் ஒரேநேரத்தில் தேர்தல்களை நடாத்துவதற்கு வசதியாகவே இவ்வாறு மாகாண சபைகள் கலைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெறும் திகதிகளைத் தேர்தல் ஆணையாளர் விரைவில் அறிவிப்பார்.

மேல்மாகாணம், மத்திய மாகாணம், தென்மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்பிரகமுவா மாகாணம் என்பவையே கலைக்கப்பட்ட ஏழு மாகாணங்களாகும்.

## தரைப்படை எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் குறைப்பு

### சண்டே ரைம்ஸ் தகவல்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இருக்கும் தரைப்படையினரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குறைக்கப்பட இருப்பதாகவும், கடல் மற்றும் விமான மார்க்கத் தாக்குதல் தீவிரமாக்கப்பட இருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டு உள்ளது.

இதேவேளை மாகாணசபை தேர்தலுக்கு முன்னர் கிழக்கிலிருந்து புலிகளை அகற்ற பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக செய்திகள் வெளியானமை தெரிந்ததே.

## வீரச்சாவு

லெப். நாயகி

[மங்கையற்கரசி]

அளவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் பெண் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் நாயகி, மங்கையற்கரசி (வீரமலை இராசலக்சுமி புதுமுறிப்பு, கிளிநொச்சி) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தமிழர் உற்பத்தி பொருள் இராணுவத்தால் அபகரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் கணேசபுரம், சமயபுரம் பகுதிகளில் தமிழ்ப் பொதுமக்களின் உற்பத்திப் பொருள்கள் சிறிலங்கா இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சமீபத்தில் இராணுவத்தால் இப்பகுதிகளில் இராணுவ வேலி அமைக்கப்பட்டு இங்குள்ள மக்கள் அகதி முகாம்களில் இருத்தப்பட்டனர். பின்னர், இம் மக்களின் விவசாய உற்பத்திப்பொருள்களை இராணுவம் கைப்பற்றி சிங்களவர்களின் வாகனங்களில் அனுப்பி வருகிறது.

இதே சமயம், விவசாய பயிர்ச் செய்கை செய்யப்பட்ட பெருந்தொகையான நிலப் பரப்பில் இராணுவ வேலி அமைக்கப்பட்டிருப்பதால் இப் பயிர் செய்யப்பட்ட காணிகளை தமிழ் விவசாயிகள் கைவிடவேண்டிய நிலை எழுந்துள்ளது.

இதே சமயம் எல்லைப் புறங்களில் உள்ள தமிழர்களின் வீடுகள் உடைக்கப்பட்டு, அங்குள்ள பொருள்கள் இராணுவத்தால் அபகரித்துச் செல்லப் படுகின்றன. (தி)

## முஸ்லிம்களின் பஸ்களில் தமிழரை ஏற்ற மறுப்பு

(மட்டக்களப்பு)

கல்முனைக்கு வடக்கே மட்டக்களப்பு வரையில் முஸ்லிம்களுக்கு சொந்தமான மினிபஸ் மற்றும்வாகனங்களில் தமிழர்கள் ஏற்றிச் செல்லப்படுவதில்லை என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்கள் மட்டுமே மட்டக்களப்பு கல்முனை வீதியில் பயணிகள் வாகனப் போக்குவரத்திற்கு படையினர் அனுமதிப்பதாகவும், இந்த நாட்களில் பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இந்த இருபது மைல் நீளமான வீதியில் பதின்மூன்று தமிழர் கிராமங்கள் இருக்கின்றன என்பதும், எட்டு இராணுவச் சோதனை சாவடிகள் இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களின் காணிகளில்

## திட்டங்களை பரிசீலிக்காமல் தீர்வுக்கு வந்த தெரிவுக்குழு

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழு இடைக்கால அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள போதும்கூட இக்குழுவின்முன்பாக சமர்ப்பிக்கப்பட்ட பல யோசனைகள் பரிசீலனைக்குக் கூட எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

அமைச்சர் தொண்டமான் இ. தொ. காவின் சார்பில் முன் வைத்த தீர்வுத் திட்டம் விவாதிக்கப்படவில்லை என்று கூறி இக்குழுவின் அமர்வுகளைப் புறக்கணிப்பதாக அறிவித்து இருந்தமை தெரிந்ததே.

இதேபோல லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் எஸ். எல். குணசேகரா போன்றோரால் முன்வைக்கப்பட்ட யோசனைகளும் பரி[...] ளப்படவில்லை.

இதுபற்றி தெரிவுக் குழுத் தலைவர் மங்கள முனசிங்கவிடம் வினவப்பட்டபோது மார்ச் 26-ல் தெரிவுக்குழு மீண்டும் கூடும்போது இது பரிசீலிக்கப்பட இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## தேர்தலுக்கு முகம்கொடுக்க ஐ.தே.க உயர்மட்டக் குழு

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியடைந்துவிடக் கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு உயர்மட்ட ஆலோசனைக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி பிரேமதாசா, பிரதமர் டி.பி. விஜயதுங்க, அமைச்சர்கள் சிறிசேன குரே, ரணில் விக்கிரமசிங்க, பெஸ்டஸ் பெரேரா, ஏ. சீ. எஸ். ஹமீத் மற்றும் முதலமைச்சர் ஜெய

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மாகாணசபை தேர்தலில் சு.க. போட்டியிடத் தயார்

(கொழும்பு)

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் மாகாண சபைத்தேர்தல்களைப் பகிஷ்கரித்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றப் போவதாக அறிவித்துள்ளது.

இலங்கை விவகாரங்களில் இந்தியா தலையிடுகிறதுஎன்று குற்றம் சாட்டி இத்தேர்தலை அன்று பகிஷ்கரித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்பொழுது ஏனைய சிறிய எதிர்க்கட்சிகளுடன் கூட்டு ஒன்றை அமைத்துக்கொண்டு தேர்தலில் பங்குபற்றவுள்ளதாக அறிவித்துள்ளது

சாய உற்பத்திப்பொருள்களை இராணுவம் கைப்பற்றி சிங்கள வர்களின் வாகனங்களில்

குள்ள பொருள்கள் இராணு வத்தால் அபகரித்துச் செல்லப் படுகின்றன. (தி)

கொள்கின்றனர்.

இச்சபை இயங்கவில்லை.

எல்லா மாகாண சபைகளுக் கும் ஒரேநேரத்தில் தேர்தல்

## முஸ்லிம்களின் பஸ்களில் தமிழரை ஏற்ற மறுப்பு

(மட்டக்களப்பு)

கல்முனைக்கு வடக்கே மட் டக்களப்பு வரையில் முஸ்லிம் களுக்கு சொந்தமான மினிபஸ் மற்றும்வாகனங்களில் தமிழர் கள் ஏற்றிச் செல்லப்படுவ தில்லை என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரி விக்கின்றன.

மேலும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட் கள் மட்டுமே மட்டக்களப்பு கல்முனை வீதியில் பயணிகள் வாகனப் போக்குவரத்திற்கு படையினர் அனுமதிப்பதாக வும், இந்த நாட்களில் பாது காப்பு ரோந்து நடவடிக்கை கள் பலப்படுத்தப்பட்டு வருவ தாகவும் தெரியவருகின்றது.

இந்த இருபது மைல் நீள மான வீதியில் பதின்மூன்று தமிழர் கிராமங்கள் இருக்கின் றன என்பதும், எட்டு இரா ணுவச் சோதனை சாவடிகள் இருக்கின்றன என்பதும் குறிப் பிடத்தக்கது.

## தமிழ் மக்களின் காணிகளில் சிங்களவர் குடியேற்றம்

### -பௌத்த பிக்குகள் மும்முரம்

வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்க ளின் காணிகளில் சிங்களவர் களை குடியேற்றுவதில் துறவி களான பௌத்தபிக்குகளே முன்னிற்கின்றனர் என தமிழ் எம். பி. ஒருவர் பாராளுமன் றத்தில் தெரிவித்தார்.

காணி அபிவிருத்தி திருத் தச் சட்ட மூலம் மீதான விவா தத்தில் பேசிய அவர், அம் பாறை, திருக்கோணமலை, வவுனியா போன்ற பகுதிக ளில் இச்சம்பவம் நடைபெற்று வருவதாக சுட்டிக்காட்டினார்.

காலங்காலமாக இனப்பிரச் சினையைத் தீர்க்க மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகளை யும் இந்த குருமார்களே மதத் தின் பேரால் தடுத்து சீர் குலைத்து வந்தனர் என்றும் அவர் கூறினார்.

# திட்டங்களை பரிசீலிக்காமல் தீர்வுக்கு வந்த தெரிவுக்குழு

இனப் பிரச்சினைத் தீர்வுக் கான பாராளுமன்றத் தெரிவுக் குழு இடைக்கால அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள போதும்கூட இக்குழுவின்முன் பாக சமர்ப்பிக்கப்பட்ட பல யோசனைகள் பரிசீலனைக்குக் கூட எடுத்துக்கொள்ளப்பட வில்லை என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

அமைச்சர் தொண்டமான் இ தொ. காவின் சார்பில்முன் வைத்த தீர்வுத் திட்டம் விவா திக்கப்படவில்லை என்று கூறி இக்குழுவின் அமர்வுகளைப் புறக்கணிப்பதாக அறிவித்து இருந்தமை தெரிந்ததே.

இதேபோல லங்கா சமசமா ஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி மற் றும் எஸ். எல். குணசேகரா போன்றோரால் முன்வைக்கப் பட்ட யோசனைகளும் பரி சீலனைக்கு எடுத்துக்கொள் ளப்படவில்லை.

இதுபற்றி தெரிவுக் குழுத் தலைவர் மங்கள முனசிங்க விடம் வினவப்பட்டபோது மார்ச் 26-ல் தெரிவுக்குழு மீண் டும் கூடும்போது இது பரிசீலிக் கப்பட இருப்பதாகத் தெரிவித் துள்ளார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியடை ந்துவிடக் கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு உயர்மட்ட ஆலோசனைக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஜனா

திபதி பிரேமதாசா, பிரதமர் டி.பி. விஜயதுங்க, அமைச்சர் கள் சிறிசேன குரே, ரணில் விக்கிரமசிங்க, பெஸ்டஸ் பெரேரா, ஏ. சீ. எஸ். ஹமீத் மற்றும் முதலமைச்சர் ஜெய

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மாகாணசபை தேர்தலில் சு.க. போட்டியிடத் தயார்

(கொழும்பு)

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் மாகாண சபைத்தேர் தல்களைப் பகிஷ்கரித்த சிறி லங்கா சுதந்திரக்கட்சி எதிர் வரும் மாகாணசபைத் தேர்த லில் பங்குபற்றப் போவதாக அறிவித்துள்ளது.

இலங்கை விவகாரங்களில் இந்தியா தலையிடுகிறதுஎன்று குற்றம் சாட்டி இத்தேர்தலை அன்று பகிஷ்கரித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்பொழுது ஏனைய சிறிய எதிர்க்கட்சி களுடன் கூட்டு ஒன்றை அமை த்துக்கொண்டு தேர்தலில் பங்குபற்றவுள்ளதாக அறிவித் துள்ளது

## மேஜர் சேகர் வெடிவிபத்தில் வீரச்சாவு

யாழ். மாவட்டத்தில் 14-03-93 அன்று பயிற்சி வேளையில் ஏற்பட்ட வெடி விபத்தொன்றில் மேஜர் சேகர் (சுப்பிரமணியம், ரூபச்சந் திரன், கற்சிலைமடு, ஒட்டி சுட்டான், முல்லைத்தீவு) வீரச் சாவடைந்தார்.

இவர் 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயக்கத்தில் இணைந்தவர் பயிற்சிகளை முடித்தபின் இந்திய இராணு



வத்துடனான பல மோதல்க ளில் திறமையாகச் செயற்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் பிரமுகர்களுக்கு பலத்த பாதுகாப்பு

## புலிகள் தாக்கலாமென அச்சம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் கொழும் பிலும் புறநகர்ப் பகுதியிலும் தாக்குதல்களை மேற்கொள் ளக்கூடும் என்று அரசு பாது காப்புப் படைகளை எச்சரித் துள்ளது. உடனடியாகப் பாது காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரசு படைகளைப் பணித்துள்ளது.

புலிகள் பிரமிக்கத்தக்க வகையில் துணிகரமான தாக் குதல்களை மேற்கொள்ளலாம் என்று பொலீஸ் மற்றும் இரா ணுவ தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. வடக்கிலும் கிழக்கிலுமிருந்து அரசின் கவ னத்தைத் திசைதிருப்பும் நோக்கத்துடன் புலிகள் தாக் குதல்களை கொழும்பில் மேற் கொள்ளலாம் என்றும் தெரி விக்கப்படுகிறது.

மட்டக்களப்பிலிருந்து புலி களின் தற்கொலைப் படைக் குழு ஒன்று கொழும்பு வந்துள் ளதாக பரா இராணுவ அதி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## நான்கு படகுகளை காணவில்லை?

(கிளாலி)

ஆலங்கேணியிலிருந்து கிளாலியை நோக்கிவந்து கொண்டிருந்த நான்கு படகு களைக் காணவில்லை என ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரி விக்கின்றன.

நேற்று அதிகாலை 5 மணி யளவில் ஆலங்கேணியிலிருந்து புறப்பட்ட படகுகளையே காணவில்லை எனத் தெரிவிக் கப்படுகிறது

## ஆனையிறவு முகாமைச் சூழ விமானக் குண்டு வீச்சு

ஆனையிறவு, கட்டைக்காடு சிறிலங்கா இராணுவ முகாம்க ளைச்சூழவுள்ள பகுதிகளில் சிறிலங்கா விமானங்கள் கண் மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களையும், கலிபர் தாக்குதலையும் மேற் கொண் டன.

நேற்றுமாலை 4 மணியள வில் ஆனையிறவு பகுதியை வட்டமிட்ட சிறிலங்கா விமா னப் படைக்குச் சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங் கள், ஓர் அவ்ரோ விமானம் மற்றும் உலங்கு வானூர்தி ஆகியன இடைவிடாது தாக்கு தல்களை நடாத்தின.

அடுத்தடுத்துப் பல குண்டு கள் வீசப்பட்ட போதிலும் இதனால் ஏற்பட்ட சேத விப ரங்கள் தெரியவரவில்லை. [86

# பிரபாகரன் கையில் வடக்கின் பரிபாலனம்

### - சந்திரிகா குமாரணதுங்க

[கொழும்பு]

வடக்கு கிழக்குப் பிரச்சினை க்கு இந்த அரசு ஒருபோதும் தீர்வுகாணமாட்டாது. இன்று வடக்கின் பரிபாலனம் பிரபா கரனின் கையில் உள்ளது என களுத்துறையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிரசார கூட் டத்தில் உரையாற்றிய சந்தி ரிகா குமாரணதுங்க தெரிவித் தார்.

எந்தப் பேச்சுவார்த்தையை நடத்தினாலும் தமிழரின் வேண்டுகோளை நிறைவேற்ற அரசால் முடியாது. யுத்த த்தை முடிவுக்கு கொண்டுவர முயன்ற ரஞ்சன் விஜேரட்ன, கொப்பேகடுவ ஆகியோர் இன் றில்லை.

இந்த அரசை என்று கவிழ் க்க சந்தர்ப்பம் கிட்டும் என மக்கள் எதிர்பார்த்திருக்கின்ற னர் எனவும் அவர் கூறினார்.

## ஏப்ரல் இறுதி வாரத்தில் தொலைக்கல்வி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பரீட்சைத் திணைக்களத்தி னால் நடாத்தப்படவிருந்த கீழ்க்காணும் பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் நடை பெறுமென பரீட்சை ஆணை யாளர் அறிவித்துள்ளதாக யாழ். பிரதேசகல்வித்திணைக் கள வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

எஸ்.எல்.ஏ. எஸ் (இலங்கை நிர்வாக சேவை) (திறந்த/மட் டுப்படுத்தப்பட்ட) பரீட்சை கொழும்பில் மே மாதத்திலி ருந்து ஜூன் மாத முற்பகுதி க்கு பிற்போடப்பட்டுள்ளதாக வும், எஸ்.எல்.ஓ.எஸ். தரம்-II கொழும்பில் ஜூன் மாத முற் பகுதியில்நடைபெறுமெனவும், தொலைக்கல்வி ஆசிரியர் பரீ ட்சை (பகுதி-1) ஏப்ரல் 26, 27 ஆம் திகதிகளில் யாழ். மாவட்டத்தில் 10 நிலையங் களில் நடைபெறுமெனவும். எஸ். எல். ஏ. எஸ். (இலங்கை நிர்வாக சேவை) தடை தாண் டும் பரீட்சை கொழும்பில் மே மாதம் 29ஆம் திகதியும் மற் றும் ஏ. ஏ. ரீ-சிறிலங்கா பரீ ட்சை கொழும்பில் மார்ச் மாதம் 20, 21, 27 ஆம் திகதி களிலும் நடைபெறுமெனவும் பரீட்சை ஆணையாளர் அறி வித்துள்ளார். (பா)

## மன்னார் பொலீஸாரிடம் நவீன ஆயுதங்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார்த்தீவில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குத லில் மூன்று நவீனரகதுப்பாக்கி கள் உட்பட பல இராணுவ உபகரணங்கள் விடுதலைப்புலி களால் கைப்பற்றப்பட்டுள் ளன.

சிறிலங்கா இராணுவக் கட் டுப்பாட்டில் உள்ளதாக கூறப் படும் மன்னார்த்தீவில் விடுத லைப் புலிகள் நடாத்திய தாக் குதலில் மூன்று பொலீஸார் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இச் சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது; மன்னார் தீவு பெரியகரிசல் சந்திக் காவ லரணிலிருந்து கால் நடையாக சிறுதோப்பு என்னுமிடத்திற்கு ரோந்து சென்றுகொண்டிருந்த ஆறு சிறிலங்கா பொலீஸார் மீது வங்காலைப்பாடு எனும் இடத்தில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளால் தாக்கு தல் நடாத்தப்பட்டது. இத் தாக்குதல் ஒரு நிமிடம் மட் டுமே நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலினால் மூன்று பொலீஸார் கொல்லப்பட்ட னர் மூன்றுபேர் ஓடித் தப்பி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## 1164 தபால் பொதிகள் 'வாதுவ'வில் வரும்

### தபால் அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் பல மாதங்க ளாகத் தேங்கிக்கிடந்த 1164 தபால்பொதிகளுடன்'வாதுவ' கப்பல் இன்னும் ஓரிருதினங் களில் பருத்தித்துறையை வந் தடையும் என வடமாகாண பிரதம தபால் அத்தியட்சகர் சேதுகாவலர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்ற உள்நாட்டு வெளிநாட்டு தபால்கள் அனைத்தும் மேற்படி கப்பலில்

(4 ஆம் பக்கம் பார்க்க )

## உளவாளிகள் !!!

## அவதானமாக இருக்கவும்...!

தேவையின்றி அடிக்கடி அந்நிய பிரதேசம் சென்று வந்தால் அவர் வீட்டில் ஏற்படும் மாற்றங்கள் காண்பீரோ?

# வரி விளம்பரம்


## மீண்டும் இயங்குகிறது

6-2-93 முதல்மீண்டும்இயங்குகின்றது சோதிட விலாச புத்தகசாலை 46, பெரிய கடை யாழ்ப்பாணம். எம்மிடம்சமய நூல்கள், விஞ்ஞான புத்தகங்கள் சோதிட, வைத்திய நூல்கள்,பாடசாலைப் புத்தகங்கள் உபகரணங்கள், ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வ க்கிய பஞ்சாங்கம் விற்பனையாகின்றன. சோதிடப்பிரகாசயந்திரசாலை கொக்குவில். (4463)

## ஸ்ரீலங்கா அச்சகம்

(புத்தகசாலையல்ல)

ஸ்ரீகாந்தா அச்சக லேன்-ராஜா தியேட்டர் அருகாமை தனது சொந்த இடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்ற தென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக்கொள்கின்றோம். 234A, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (4457)

## அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று (3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை)யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள்). (சி-6126)

## வரலாறு ஆண்டு10

குறிப்புகள், பரீட்சைக்கான வினாவிடைகள், பயிற்சிகளுக்கான விளக்கங்கள், புதிதாக எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. குறிப்பிட்டளவு பிரதிகள் மட்டுமேஉள்ளன. ஆக்கம் நா. மயில்வாகனம் சென்.ஜோன்ஸ் கல்லூரி. [4493]

## இலகுசெயல்நூல் ஆண்டு 6

வரலாறும் சமூகக்கல்வியும் புதிதாக வெளிவந்துள்ளது. சமூகக்கல்வி 15 அத்தியாயங்கள், வரலாறு 11 அத்தியாயங்கள் தனித்தனியே வினாவிடைகள். பயிற்சிகளுக்கு விடைகள். மூன்று மாதிரி தவணைப் பரீட்சை வினாத்தாள் விடைகள்.ரூபா28.50 மட்டுமே. ஆக்கம் நா. மயில்வாகனம் சென்


# "இ" அட்டைக்கு பதில் உணவு முத்திரை

(தொல்புரம்)

இடம் பெயர்ந்தோர்களின் உலர் உணவு விநியோகத்திற்கான "இ" அனுமதி அட்டைக்குப் பதிலாக உணவு முத்திரை வழங்கப்படவுள்ளது.

தொல்புரம்/மத்தி, மேற்குக் கிராமசேவையாளர் பிரிவில் வதியும் அனைத்து இடம் பெயர்ந்தோருக்கும் உணவு முத்திரை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் கிராம சேவையாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி படிவத்தை பூரணப்படுத்தி குடும்பத் தலைவர் அல்லது தலைவி பின்வரும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்: உலர் உணவு விநியோகத்திற்கான "இ" அட்டை, குடும்பப் பதிவு அட்டை, அடையாள அட்டை, புனர்வாழ்வு புனரமைப்பு நிவாரணத் திட்டத்திற்கான குடும்பப் பதிவு அட்டை ஆகியன

மேலும், தெல்லிப்பழை, மாதகல், மூளாய், சுழிபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தோர் எதிர்வரும் வியாழன், வெள்ளி தினங்களில் காலை 9-00 மணியிலிருந்து மாலை வரையும், காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்தோர் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9-00 மணியிலிருந்து மாலை வரையும் மேற்கூறிய விண்ணப்பப்படிவத்தினையும், ஆவணங்களையும் கிராமசேவகர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு தொல்புரம் மேற்கு ஜே/169, கிராம சேவையாளர் திரு. ஆர். சிறிரஞ்சன் தெரிவித்துள்ளார். (41)

# பளை வைத்தியசாலைக்கு ரி.ஆர்.ஓ. உதவி வழங்கியது

(தென்மராட்சி)

பளை அரசினர் வைத்திய சாலைக்கு நோயாளிகளின் தண்ணீர் கஷ்டத்தை மனதில் கொண்டு பளை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் சுமார் 20,000/- பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றையும் வைத்தியசாலைக்கு 15,000/- பெறுமதியான தளபாடங்களையும்அன்பளிப்பு செய்துள்ளனர். நோயாளர் அன்றாடம் வந்து தங்குவதற்கு இடவசதி போதமையின் காரணத்தால் சீற் போட்ட கொட்டகை ஒன்றையும் சென்ற மாதம் இவர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டமை தெரிந்ததே. (86)

# பனையால் விழுந்தவர் பரிதாப மரணம்

பனையொன்றில் ஏறிய போது அதிலிருந்து தவறி விழுந்ததில் ஆறுபிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலேயேபலியாகிய பரிதாபகரமான சம்பவம் ஒன்று கடந்த சனியன்று அராலி மத்தியில் நிகழ்ந்துள்ளது. மாணிக்கம் கந்தசாமி (வயது 53) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு பரிதாபகரமாக பலியாகியவராவார். அயலவர்கள் உடனடியாக ஓடிச்சென்று உதவிய போதும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. (20)

# தபால் தாமதத்தினால் பதவி உயர்வு பாதிப்பு

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சீரற்ற தபால் சேவையினால் பரீட்சார்த்தி ஒருவர் இலங்கை விஞ்ஞான சேவைகள் (1991) நேர்முகப் பரீட்சைக்கு உரிய நேரத்தில் தோற்ற முடியாத நிலையில் சந்தர்ப்பத்தை இழந்துள்ளார்.

நடந்து முடிந்த இலங்கை விஞ்ஞான சேவைகள் போட்டிப் பரீட்சையில் அதியுயர் புள்ளியைப் பெற்றிருந்த பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவரே இச்சந்தர்ப்பத்தை இழந்தவராவர்.

மேற்குறித்த நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்பட்ட கடிதம் உரிய நேரத்தில் கிடைக்காததாலேயே உத்தியோக உயர்வு பாதிக்கப்பட்டது. (யோ)


## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி




# புதிய கூட்டு முன்னணிக்கு ஆணையாளர் அங்கீகாரம்

எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணியினால் உருவாக்கப்பட்ட "பொது ஜன எக்ஸ்சத் பெரமுன" தேர்தல் ஆணையாளரினால் உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இக் கட்சியின் சின்னமாக நாற்காலி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் தலைவியாக திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், செயலாளராக சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றஉறுப்பினர் ஜயரட்னவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக் கட்சியில் இன்னும்பல எதிர்க்கட்சிகள் சேர இருப்பதாகவும் முக்கிய எதிர்க்கட்சிகளில் ஒன்றான ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி அண்மையில் தமது தலைமைத்துவம்பற்றிய பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்த்ததாகவும், மிகவிரைவில் கூட்டுமுன்னணியுடன் இணைவதுபற்றிஆராய இருப்பதாகவும் அதன் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

## தவில் அரங்கேற்றம்

கெருடாவிலைச் சேர்ந்த திரு சிவம் - தெட்சணாமூர்த்தியின் தவில் வாத்திய அரங்கேற்றம் அண்மையில் துன்னாலை கோயில் கடவை சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. [30]

## 1991-92 கல்வியாண்டில்

# மகாபொல பரிசில் பெறும் யாழ். மாணவர் குறைவு

(யாழ்ப்பாணம்)

1991-92 புதியகல்வியாண்டு யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல புலமைப் பரிசில் பெற்ற மாணவ மாணவிகளின் பெயர் பட்டியல் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்டது.

கலை, விஞ்ஞானம், மற்றும் மருத்துவ பீடமாணவர்கள் 224 பேருக்கு மட்டுமே புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளதாக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

கடந்த வருடத்தை விட 1991 - 92 கல்வியாண்டுக்கு கூடுதல் மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட போதும் மகாபொல புலமைப்பரிசில் திட்டமிட்ட ரீதியில் குறைக்கப்பட்டுள்ளதாக மாணவ, ஆசிரிய தரப்பு அதிருப்தி தெரிவித்துள்ளது.

1990-91 கல்வியாண்டுக்கு முந்நூற்றி பத்தொன்பது மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது. 1991-92 கல்வியாண்டில் மகாபொல திட்டமிட்ட ரீதியில் குறைக்கப்பட்டுதென் பகுதி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர்களின் புள்ளிவிபர ரீதியான தகவல் வெளிக்காட்டுவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (05)


யாழ். இந்து

## முன்னாள் சாரணர்களுக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய சாரணர்களை சாரணர் குழுவின் 75ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு அவர்களது முழுப்பெயர், தற்போதைய தொழிலும், முகவரியும், கல்லூரியில் சாரணராக விருந்த காலத்தைக் குறிப்பிட்டு அதிபரின் முகவரிக்கு கூடிய விரைவில் அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

சாரணர்குழுத் தலைவர்

யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம். (4480)


உ

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
**சி. கணபதிப்பிள்ளை**
அவர்களின்

## பிறந்ததின. நினைவு தின நிகழ்வுகள்

1. பேச்சுப்போட்டி -: ஆண்டு 13 வரை கற்றுக்

# மன்னார் வயல்களில் எரிநோய் தாக்கம்

மன்னாரில் செய்கை பண்ணப்பட்டுள்ள காலபோக நெற் செய்கை மீது எரிநோய் தாக்கம் அதிகரித்து வருகின்றது இதனால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்

பொருளாதாரத் தடைகள், இராணுவ நெருக்கடிகள் மத்தியிலும் கட்டுக்கரை குள நீர்பாசனத்தின் கீழ் விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது பயனைப் பெறுகின்ற இவ்வேளையில் கழுத்தழுகல் போன்ற எரிநோய்களால் அறுவடை நேரத்தில் வேளாண்மையை கைவிடப்பட வேண்டிய சூழ் நிலையில் உள்ளதெனவும் இதற்கேற்ற கிருமிநாசினிகளை பல தடவைகள் தெளித்தும் கட்டுப்படுத்த முடியவில்லை என விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்

## உத்தர விழா

(கொழும்புத்துறை)

யாழ். வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீசிவன் ஆலய பங்குனி உத்தரப் பெருவிழாஎதிர்வரும் வியாழக்கிழமை காலை 10.50 மணிக்கு ஸ்தம்ப பூஜை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (24)

## சிறிலங்காவின் உதவி

பம்பாய் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் காயமுற்றவர்களுக்கு உதவுவதற்கென சிறிலங்காவின் மனித இழைய வங்கி ஆயிரத்து ஐந்நூற்று நாற்பது சதுர அங்குல மனித இழையங்களைக் கொண்ட பக்கெட்டுகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

## மெய்வல்லுநர் போட்டி

நாகர் கோவில் மகாவித்தியாலயத்தின் மெய்வல்லுநர் போட்டி நாளை மாலை நடைபெறவுள்ளது. (30)

# நினைவு கூருகின்றோம்...

## 1993-03-17

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

★ சொர்ணம் [மூத்தான் சிவசரணம் - முப்பதேக்கர், மூதூர் - திருமலை]

மட்டு - நிந்தவூர், அட்டப்பள்ளம் பகுதியில் தேச விரோதக் குழுவினர் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

லெப். லவன் [செல்லப்பா பாக்கியநாதன் - அட்டப்பள்ளம், நிந்தவூர் - மட்டு.]

யாழ் - கைதடி, நாவற்குழிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். ஜீவா-கேதீஸ் [திருச்செல்வம் விஜயானந்தன் - 211/2, பிரதான வீதி, குருநகர் - யாழ்.]

1988 ஆம் ஆண்டு செட்டிப்பாளையத்தில் இந்தியப் படையால் கைது செய்யப்பட்டு தேசவிரோதிகளினால் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த -

ரமணன் [கணபதிப்பிள்ளை இலட்சுமணன் - பொத்துவில்-03 - அம்பாறை]

மட்டு -மணற்பிட்டியில் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டு இந்தியப் படையினரால் அடித்துக் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த -

றிஸ்வான் [மாமங்கம் தெட்சணாமூர்த்தி - திருப்பழுகாமம் - மட்டு.]

1989 ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ பரமேஸ் [குணரத்தினம் பரமேஸ்வரன் - தம்பலகமம் - திருக்கோணமலை]

1992 ஆம் ஆண்டு மணலாறு - கொக்குத்தொடுவாய் முகாமிலிருந்து "ஒப்பரேசன் கஜபரா" நடவடிக்கையினை மேற்கொள்ளும் முகமாக வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

2-ம் லெப். செம்மனச்செம்மல்-குரு (வீரசிங்கம் ஜெயராசா - நாவிதன்வெளி. கல்முனை - அம்பாறை)

2-ம் லெப். புவியழகன் (லுவிஸ் மாக்குள் - மாங்

## வரலாறு ஆண்டு 10

குறிப்புகள், பரீட்சைக்கான வினாவிடைகள், பயிற்சிகளுக்கான விளக்கங்கள், புதிதாக எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. குறிப்பிட்டளவு பிரதிகள் மட்டுமே உள்ளன. ஆக்கம் நா. மயில்வாகனம் சென். ஜோன்ஸ் கல்லூரி. [4493]

## இலகுசெயல்நூல் ஆண்டு 6

வரலாறும் சமூகக்கல்வியும் புதிதாக வெளிவந்துள்ளது. சமூகக்கல்வி 15 அத்தியாயங்கள், வரலாறு 11 அத்தியாயங்கள் தனித்தனியே வினாவிடைகள். பயிற்சிகளுக்கு விடைகள். மூன்று மாதிரி தவணைப் பரீட்சை வினாத்தாள் விடைகள். ரூபா 28.50 மட்டுமே. ஆக்கம் நா. மயில்வாகனம் சென் ஜோன்ஸ் கல்லூரி. (4494)

## இன்று திரைநீக்கம்

(பருத்தித்துறை)

கேணல் கிட்டுவின் 61 வது நாள் சிரார்த்த தினத்தையொட்டி அன்னாரின் திருவுருவப்படத் திரை நீக்கமும் கலைவாணி சனசமூக நிலையபாலர் பாடசாலைத் திறப்புவிழாவும் திரு. வ. வெள்ளையன் தலைமையில் இன்று 17 ஆம் திகதி நடைபெறுகின்றது. கேணல் கிட்டுவின் திருவுருவப்படத்தை கடற்புலிகளின் முக்கிய உறுப்பினர் திரைநீக்கம் செய்து வைப்பார். (25)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

### புதிய அனுமதிகள் 1991–92 (பௌதிகவிஞ்ஞானம்) வெற்றிடங்களை நிரப்புதல்

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கான மாணவர்களை பதிவுசெய்யும் இறுதிநாள் 1''-05-93 வரை நீடிக்கப்பட்டுள்ளது. நேரில் வந்து பதிவு செய்ய முடியாதோர் தபால் மூலம் பதிவு செய்து கொள்ளலாம். இதுவரை பதிவுசெய்யாதோர் உடன் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்.

– பதிவாளர்

(சி-6210)

---

...அராலி மத்தியில் நிகழ்ந்துள்ளது. மாணிக்கம் கந்தசாமி ... முடியாமல் போய்விட்டது. (20)

## தபால் தாமதத்தினால் பதவி உயர்வு பாதிப்பு

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சீரற்ற தபால் சேவையினால் பரீட்சார்த்தி ஒருவர் இலங்கை விஞ்ஞான சேவைகள் (1991) நேர்முகப் பரீட்சைக்கு உரிய நேரத்தில் தோற்ற முடியாத நிலையில் சந்தர்ப்பத்தை இழந்துள்ளார்.

நடந்து முடிந்த இலங்கை விஞ்ஞான சேவைகள் போட்டிப் பரீட்சையில் அதியுயர் புள்ளியைப் பெற்றிருந்த பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவரே இச்சந்தர்ப்பத்தை இழந்தவராவர்.

மேற்குறித்த நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்பட்ட கடிதம் உரிய நேரத்தில் கிடைக்காததாலேயே உத்தியோக உயர்வு பாதிக்கப்பட்டது. (யோ)

---

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



### நாகலிங்கம் வேலாயுதம்

(துரை)

தோற்றம்:– 03. 08. 1927 மறைவு:– 07. 04. 1983

திதி:- 17- 03- 1993

சீரான சிந்தையையும் சிரித்த உங்கள் இன் முகத்தையும் எங்களால் மறக்க முடியவில்லை. அன்பும், பண்பும், பாசமுமாய் எம்மை வளர்த்து பாதி வழியில் பிரிய முடியாமல் பிரிந்து விட்டீர்களே! பத்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை வாட்டுகின்றன.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

துரை பேக் ஹவுஸ்,
சூராவத்தை,
சுன்னாகம். (4478)

---

களை சாரணர் குழுவின் 75ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு அவர்களது முழுப்பெயர், தற்போதைய தொழிலும், முகவரியும், கல்லூரியில் சாரணராக விருந்த காலத்தைக் குறிப்பிட்டு அதிபரின் முகவரிக்கு கூடிய விரைவில் அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

சாரணர்குழுத் தலைவர்

யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம். (4480)

---

உ

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி

### சி. கணபதிப்பிள்ளை

அவர்களின்

## பிறந்ததின, நினைவு தின நிகழ்வுகள்

1. பேச்சுப்போட்டி -: ஆண்டு 13 வரை கற்றுக் கொண்டு இருக்கும் மாணவர்களுக்கு மட்டும் உரியது.
   தலைப்பு -: ''இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பணிகள்''
2. கட்டுரைப்போட்டி -: பாடசாலை மாணவர்கள் அல்லாதவர்களுக்கு உரியது.
   தலைப்பு -; ''இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் சைவ தமிழ்ப்பணிபற்றிய ஒரு நோக்கு.''

இரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப் பெற உள்ளன.

விண்ணப்பப்படிவங்களையும் ஏனைய விபரங்களையும் அ. பஞ்சாட்சரம் காரியதரிசி, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை உரும்பராய் என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

பண்டிதை பொன். பாக்கியம் அ. பஞ்சாட்சரம்
தலைவர் காரியதரிசி

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை உரும்பராய்

(4467)

---

நல்லூர்

## லயன்ஸ் கழக கலைவிழா

மேற்படி கழகத்தின் முத்தமிழ் கலை விழாவில் பின்வரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

நிகழ்ச்சிகள்

1. நடனம் - செல்வி மைதிலி அம்பலவாணர்.
2. நாடகம் - நீராவியடி கலைக்கல்லூரி வழங்கும் 200க்கு மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் 22வது மேடை நாடகம் இலங்கை வேந்தன் பங்குபற்றும்

"போர் முரசம் கேட்கிறது"

[1982இன் காலகட்டத்தை சித்திரிக்கும்]

இடம் :- பரியோவான் கல்லூரி மண்டபம்

திகதி : 18-03-93 (வியாழக்கிழமை)

காலம்:- பிற்பகல் 3 மணி 6 மணி வரை

அனுமதிச்சீட்டு:– மண்டப வாயிலில் 18–03–93 பி. ப. 2–00 மணி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

[அன்பளிப்பு ரூ. 100/- ரூ. 50/- மட்டும்]

க. இராசலிங்கம் (4477) வ. பரமசிவம்
செயலாளர். தலைவர், நல்லூர்லயன்ஸ்கழகம்.

---

1988 ஆம் ஆண்டு செட்டிப்பாளையத்தில் இந்தியப் படையால் கைது செய்யப்பட்டு தேசவிரோதிகளினால் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த -

**ரமணன்** [கணபதிப்பிள்ளை இலட்சுமணன் - பொத்துவில்-03 - அம்பாறை]

மட்டு -மணற்பிட்டியில் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டு இந்தியப் படையினரால் அடித்துக் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த -

**றிஸ்வான்** [மாமங்கம் தெட்சனாமூர்த்தி - திருப்பழுகாமம் - மட்டு.]

1989 ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **பரமேஸ்** [குணரத்தினம் பரமேஸ்வரன் - தம்பலகமம் - திருக்கோணமலை]

1992 ஆம் ஆண்டு மணலாறு - கொக்குத்தொடுவாய் முகாமிலிருந்து ''ஒப்பரேசன் கஜபரா'' நடவடிக்கையினை மேற்கொள்ளும் முகமாக வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். செம்மனச்செம்மல்-குரு** (வீரசிங்கம் ஜெயராசா - நாவிதன்வெளி. கல்முனை - அம்பாறை)

**2-ம் லெப். புவியழகன்** (லூவிஸ் மாத்துள் - மாங்கேணி, வாழைச்சேனை - மட்டு.)

**தங்கப்பன்** (கந்தையா சுவேந்திரன் - மாங்கேணி, வாழைச்சேனை - மட்டு.)

**2-ம் லெப். தகையான்-தாஸ்** (ஆசிரத்தினலால் சிறி ஆரியதிலக - விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை - மட்டு.)

**2-ம் லெப். அண்டகை** (சிவசுந்தரம் சுரேஸ்குமார் - 6-ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி - திருக்கோணமலை)

**2-ம் லெப். இளம்சேரலாதன்** (கனகசபை கணேஷ்குமார் - மத்திய வீதி - திருக்கோணமலை)

**கப்டன் குகனேஸ்வரன்-சுசீலன்** (அந்தோனி ஸ்ராலின் - சிலாவத்தை - முல்லைத்தீவு)

**இராமநாதன்** (சிவலிங்கம் சிவபாலன் - பாரதிபுரம்-கிளிநொச்சி)

**கூர்வேல்** (சுந்தரம்பிள்ளை விஜயகுமார் - முறிகண்டி-கிளிநொச்சி)

**லெப். ஈழவன்** (அரியரத்தினம் பிரதிப்குமார் - குருமபசிட்டி, தெல்லிப்பழை -யாழ்.)

**2-ம் லெப். இராசன்** (வல்லிபுரம் கேமராசா - இராசவீதி, கோப்பாய் மத்தி - யாழ்.)

**இளங்குன்றன்** (அப்புலிங்கம் ஜெகதீஸ்வரன் - பாரதி வீதி, பத்தைமேனி - அச்சுவேலி)

**ஞானி** (இராசரத்தினம் வைகுந்தன் - தெருமூடி மடத்தடி, அல்வாய் வடக்கு - பருத்தித்துறை)

மட்டு - கொக்கட்டிச்சோலை, முந்திரியப் பள்ளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது ஏற்பட்ட கடும் சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் சேது** (சின்னத்துரை ரவிச்சந்திரன் - கோயில்போரதீவு – மட்டு.)

**லெப் தீபன்** (சுந்தரம் சுதாகரன் - தாண்டவன்வெளி - மட்டு.)

**2-ம் லெப். விதுரன்** (கந்தையா ஜீவா - லுணுகலைத் தோட்டம்-பதுளை மலையகம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம் .

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6209)

சிந்தனைக்கு

அரசியல்வாதி ஆண்டவனையே தட்டிக்கழித்து விட வல்லவன்.
— வில்லியம் ஷேக்ஸ்பியர்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17- 03- 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05


## 'அரசியல் நாடகம்'

கடந்த எட்டாம் திகதி மட்டக்களப்பில் புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக சேவைகள் அமைச்சின் நடமாடும் சேவைகள் இடம்பெற்றது. வழமை போலவே இந்நடமாடும் சேவைக்குச் சகல ஏற்பாடுகளும் நடைபெற்றன. அமைச்சர்களும், அதிகாரிகளும் சமுகம் அளித்திருந்தனர்.

ஆனால் வழமை போல் நடமாடும் சேவை முடிவடைந்த பின்னர் அதில் பங்குபற்றிய அமைச்சர்களிடம் இருந்தோ, அதிகாரிகளிடம் இருந்தோ அன்றி அரச தரப்பில் இருந்தோ நடமாடும் சேவையின் புகழ் பரப்பும் செய்திகள் எவையும் வெளிவரவில்லை. மாறாக, அரச சார்புப் பத்திரிகைகள் அவை பற்றி மௌனம் சாதிக்க ஒரு சில பத்திரிகைகள் மட்டும் நடமாடும் சேவைக்குச் சென்று வெறுங்கையுடன் திரும்பிய தமிழ் மக்களைப் பற்றிய தகவலை வெளியிட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலும் இருந்து வந்த ஆண், பெண் உட்பட சுமார் 6000 பேர் நடமாடும் சேவையினால் தமது குறை தீர்க்கப்படும் என நம்பி ஏமாந்தனர். அவர்கள் முதல் நாள் இரவில் இருந்தே நடமாடும் சேவை நடைபெற இருந்த அலுவலகம் முன் வரிசையில் ஒருமைல் நீளம் வரை காத்து கிடந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஏதோ ஒருவகையில் இராணுவ நடவடிக்கையால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களுக்குரிய நஷ்டஈடு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே வந்திருந்தனர். இச்சேவைக்கு வந்தவர்களில் இறந்தோரின் பெயரில் 907 பேருக்கும், காயமடைந்தோரின் பெயரில் 590 பேருக்கும் நஷ்டஈடு வழங்கப்படவிருந்தது. ஆனால் பின்னர் பணம் வரவில்லை எனக் காரணம் காட்டி கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

ஆனால் நஷ்டஈடுகள் வழங்கப் பணம் வந்து சேரவில்லை எனச் சிறிலங்கா அரச அதிகாரிகள் கூறும் காரணம் உண்மைக்குப் புறம்பானது. சுத்தப் பொய். ஏனெனில் நடமாடும் சேவைகள் உடனடியாகத் திட்டமிட்டு நினைத்த மாதிரிச் செய்து முடிக்கப்படும் நிகழ்வுகள் அல்ல. இது சிறிலங்கா ஜனாதிபதியின் நடமாடும் செயலகத்திற்கான முன்னோடிச் செயலாகும். பல மாதங்கள் திட்டமிட்டு, முன்னறிவித்துச் செய்யப்படும்ஒரு திட்டமாகும்.

ஆகையினால் பணம் வரவில்லை எனக்கூறும் காரணம் பிரச்சினையைத் தட்டிக்கழிக்க முற்படும்

## மசூதி இடிக்கப்பட்டதற்கு பா.ஜ. தலைவர்களே காரணம்

### வெள்ளை அறிக்கையில் தெரிவிப்பு

(டில்லி)

அயோத்தியில் கடந்த டிசம்பர் 6ஆம் திகதி நடைபெற்ற சம்பவம் தொடர்பாக வெள்ளை அறிக்கையை மக்களவையில் இந்திய மத்திய உள்துறைஅமைச்சர்எஸ்.பி.சவான் தாக்கல் செய்தார் அதில் பாபர் மசூதி இடிப்புக்கு பாரதீய ஜனதா தலைவர்கள் அத்வானி, ஜோஷி போன்றவர்களின் தூண்டுதல்களே காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக 'வெள்ளை' அறிக்கை ஒன்றை மத்திய அரசு தாக்கல் செய்யவேண்டுமென ஜனதாதள தலைவர் வி. பி. சிங் உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்ததை அடுத்தே எஸ். பி. சவான் 122 பக்கங்கள் கொண்ட வெள்ளை அறிக்கையை தாக்கல் செய்தார்.

இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: உத்தரப் பிரதேசத்தில் பைசாபாத் மாவட்டத்தில் உள்ள அயோத்தியில் கடந்த டிசம்பர் மாதம் 6ஆம் திகதி ராமர் கோவில் கட்டுவதற்கு 'கரசேவை' நடாத்தப் போவதாக அறிவித்திருந்தவர்கள் அங்கு இருந்த கட்டடத்தை தகர்த்து விட்டனர். இந்த செயல் பொறுப்பு இல்லாத செயல் ஆகும். அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதற்கு இது மோசமான முன் உதாரணமாகும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அரசியல் சட்டத்தை மதித்து நடப்போம். சட்டத்தை நிலை நிறுத்துவோம் என்று உறுதிமொழி எடுத்தவர்கள் அதைக் காப்பாற்றத் தவறி விட்டனர்.

மசூதியை உடைத்த 'குற்றச்' செயலை பொலீசாரும் அதிகாரிகளும் கண்டும் காணாதது போல் இருந்தனர். அப்போது பதவியில் இருந்த உத்தரப் பிரதேச முதலமைச்சர் (கல்யாண்சிங்) உத்தரவுப்படி அவர்கள் மௌனம் சாதித்திருக்கின்றார்கள். அயோத்தியில் நிறுத்தப்பட்டிருந்த 'ரிசர்வ்' பொலீசாரையும் செயல்பட விடாமல் அந்த மாவட்ட நீதிபதியும், உயர் அதிகாரிகளும் தடுத்து விட்டனர். சம்பவத்தன்று அயோத்தியில் 70 ஆயிரம் பேர் திரண்டிருந்தனர். 500 சாமியார்களும் கூடியிருந்தனர். நீதிமன்ற உத்தரவை மீறாது கரசேவையையும் அதற்கான பூசையையும் நடாத்தப் போவதாக அறிவித்திருந்தனர். நண்பகல் 12 மணியளவில் அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையில் பாரதீய ஜனதா, விஷ்வ இந்து பரிஷத், ஆர். எஸ்.எஸ். என்பவற்றின் தலைவர்கள் பேசினர். கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஆயிரம் பேர் வளையம் போல் நின்ற பொலீசாரைத் தள்ளிக் கொண்டு மசூதி இருந்த பகுதிக்குச் சென்றனர். பின்பு மசூதி மீது ஏறி அதனைத் தகர்த்தனர். அப்போது அயோத்தி வளாகத்திற்குள் 25 ஆயிரம் பேர் இருந்தனர். இரண்டு மணி நேரத்தில் 75 ஆயிரம் பேர் கூடிவிட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கு அமெரிக்க சூறாவளி 67பேர் இதுவரை பலி!

அமெரிக்காவின் கிழக்கு கரையோரப் பகுதியில் இந்நூற்றாண்டிலேயே மிகவும் கடுமையாக வீசியதாகக் கூறப்படும் சூறாவளியினால் இதுவரையில் 67பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் அநேகமானோர் புளோரிடா மாநிலத்தை சேர்ந்தவர்கள்.

சூறாவளியினால் வெள்ளப் பெருக்கு, கடும் உறைபனி, இடியுடன் கூடிய மழை ஆகியவற்றுடன் கூடிய வானிலை காணப்பட்டதாகவும் இதனால் பல இடங்களில் மின்சாரம், தொலைபேசி தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

சிக்காகோ, பொஸ்ரன், நியூயோர்க், அற்லான்றா விமான நிலையங்கள் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன. மக்களை வெளியே நடமாட வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

1888ஆம் ஆண்டிற்கு பின் அமெரிக்காவில் வீசிய கடும் சூறாவளி இதுவென தெரிவிக்கப்படுகின்றது.

# பம்பாய் குண்டுவெடிப்புக்கு வெளிநாடு ஒன்றே காரணம்

### -அமைச்சர் சவான் பகிரங்க அறிவிப்பு

(டில்லி)

பம்பாய் அனர்த்தங்களுக்கு வெளிநாடு ஒன்றுதான் காரணம். உள்ளூர் ஏஜென்ட் மூலம் இக்கொடூரத்தை அந்த வெளிநாட்டு சக்தி செய்துள்ளது என மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று இராஜ்ய சபாவில் தெரிவித்தார்.

உறுப்பினர்களின்கேள்விக்கு பதிலளித்து பேசிய அமைச்சர் சவான், பம்பாய் சம்பவம் தொடர்பாக உளவுத்துறைக்கு முக்கியதுப்பு கிடைத்துள்ளது. இவை நிரூபிக்கப்பட்டால் முழு சதித்திட்டமும் வெளிவரும். இச்சம்பவத்திற்கு மூலகாரணமானவர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். அவர்களின் கைக்கூலிகள் இதற்கென பயன்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் இந்தியாவிலேயே உள்ளனர் என குறிப்பிட்டார்.

உளவுத்துறைக்கு கிடைத்துள்ள தகவல்களை பாதுகாப்புக்கருதி இப்போது வெளியிட முடியாதுஎன்றும் சவான் தெரிவித்தார்.

## கடத்தல்காரர் பம்பாயில் கைது

பம்பாய் குண்டு வெடிப்புத் தொடர்பாக பிரபல இந்திய போதைப்பொருள் கடத்தல் காரரான பிலுகான் என்பவரும் மேலும் மூவரும்பம்பாயில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தீவிரவாத எதிர்ப்பு படையினருடனான மோதலில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக பிலுகான் வைத்தியசாலைக்கு சென்ற போதே அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம் வெடிகுண்டுடன் காணப்பட்ட ஸ்கூட்டர் தொடர்பாக இயந்திர திருத்துனர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலீஸார் அறிவித்துள்ளனர்.

## இந்திய கரையில் இறங்கிய 64 மர்மப் பொதிகள்

கடந்த மாதம் 22-ம் திகதி மகாராஷ்டிரா குஜராத் கடற்கரைகளில் 64 மர்மப் பொதிகள் படகுகளில் வந்து இறங்கியதாக இந்தியப் பத்திரிகையான ஸ்ரேற்ஸ்மன் செய்தி வெளியிட்டுள்ளது.

டுபாயிலிருந்து வந்த படகுகளே இந்த மர்மப்பொதிகளைக் கொண்டு வந்ததாகவும் எனினும் இவை பாகிஸ்தான் கராச்சியில் இருந்தே புறப்பட்டிருக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் கருதுவதாக அப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பொதிகளுக்கும் பம்பாய் சம்பவங்களுக்கும் தொடர்பு ஏதும் உண்டா என்பது குறித்து அதில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

### பாகிஸ்தான் மறுப்பு

பம்பாய் குண்டு வெடிப்பிற்கும் தமக்கும் தொடர்பில்லை என பாகிஸ்தான் மறுத்துள்ளது. குண்டுவெடிப்பின் பின்னணியில் பாகிஸ்தான் இருந்திருக்கக்கூடும் என இந்தியாவில் நிலவும் சந்தேகங்கள் பண்பாட்டுக்கு ஒவ்வாதவை ஆதாரமற்றவை என பாகிஸ்தான் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

## பஸ் தாமதமானதால் பயணிக்கு நட்டஈடு!

(சென்னை)

தமிழ அரசுக்கு சொந்தமானபஸ்வண்டிசேர.வேண்டிய இடத்திற்கு இரண்டு மணி நேரம் தாமதித்து சென்றடைந்ததால் பயணி ஒருவருக்கு அந்த நிறுவனம் 500 ரூபா நட்டஈடு கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தஞ்சாவூரிலிருந்து சென்னை சென்ற இந்த பஸ் இடையில் பழுதடைந்ததால் சென்னைக்கு இரண்டுமணி நேரம் தாமதித்து சென்றடைந்தது. இதனால் பாதிப்படைந்த பயணி ஒருவர் நுகர்வோர் குறைதீர்க்கும்குழுவிடம்முறையிட்டதையடுத்து அப்பயணிக்கு அந்த போக்குவரத்து நிறுவனம் நட்டஈடாக 500 ரூபா வழங்குமாறு அக்குழு உரத்தவிட்டுள்ளது. வழக்குச் செலவு தொகையாக 250 ரூபா வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## ஐ. எஸ். ஐ. திட்டம் குறித்து எச்சரிக்கப் பட்டிருந்தது

பம்பாய் அல்லது அகமாபாத்தில் ரம்ழான் மாதத்தில் வகுப்புக் கலவரங்களை தூண்டக்கூடிய வகையில் பாகிஸ்தானின் உளவுப் பிரிவான ஐ. எஸ். ஐ திட்டமிட்டுள்ளதாக ஏற்கனவே மாநிலங்களின் தலைநகரங்களில் உள்ள பொலீஸ் தலைமையகங்களுக்கு தகவல் கிடைத்திருந்தது.

இத்தகவலை வெளியிட்டுள்ள ரைம்ஸ் ஒப் இந்தியா நாளிதழ் பெப்ரவரி மூன்றாம் வாரத்தில் இது குறித்து பொலீஸ் உயர் அதிகாரிகள் உஷார் படுத்தப்பட்டிருந்தனர் எனக் குறிப்பிட்டது.

# வாழைச்சேனை - புனானைக் காடுகள் அழிக்கப்படும்

### இராணுவ அதிகாரி தகவல்

## நீண்ட கடல்மார்க்கமாக மன்னாருக்கு பயணம்

(வவுனியா)

மன்னார் மாவட்டத்தில்சிறிலங்கா இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் மக்கள் வவுனியா ஊடாக புத்... மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் இந்த நீண்ட தூர பயணத்தை மேற்கொள்கின்றனர்

மன்னார்த் தீவில் உள்ள மக்கள்கற்பிட்டி ஊடாக புத்தளம்

இராணுவ நடவடிக்கையால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களுக்குரிய நஷ்டஈடு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே வந்திருந்தனர். இச்சேவைக்கு வந்தவர்களில் இறந்தோரின் பெயரில் 907 பேருக்கும், காயமடைந்தோரின் பெயரில் 590 பேருக்கும் நஷ்டஈடு வழங்கப்படவிருந்தது. ஆனால் பின்னர் பணம் வரவில்லை எனக் காரணம் காட்டி கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

ஆனால் நஷ்டஈடுகள் வழங்கப் பணம் வந்து சேரவில்லை எனச் சிறிலங்கா அரச அதிகாரிகள் கூறும் காரணம் உண்மைக்குப் புறம்பானது. சுத்தப் பொய். ஏனெனில் நடமாடும் சேவைகள் உடனடியாகத் திட்டமிட்டு நினைத்த மாதிரிச் செய்து முடிக்கப்படும் நிகழ்வுகள் அல்ல. இது சிறிலங்கா ஜனாதிபதியின் நடமாடும் செயலகத்திற்கான முன்னோடிச் செயலாகும். பல மாதங்கள் திட்டமிட்டு, முன்னறிவித்துச் செய்யப்படும்ஒரு திட்டமாகும்.

ஆகையினால் பணம் வரவில்லை எனக்கூறும் காரணம் பிரச்சினையைத் தட்டிக்கழிக்க முற்படும் செயலாகவே கருத இடமுண்டு. பணம் வழங்குவதில்லை என அரசாங்கம் முன்னரே முடிவு செய்துள்ளது என்பதே சரியானது. அவ்வாறு இல்லாமல் உண்மையிலேயே அமைச்சர்கள், அதிகாரிகள் நஷ்டஈடு வழங்க விருப்பம் உடையவர்களாக இருந்திருப்பின் ஒரு ஹெலிகப்டரின் உதவியுடன் பணத்தை கொண்டுவந்து கொடுத்து விடலாம்.

ஆனால் சிங்கள அரசாங்கம் அதைச் செய்யவில்லை. தமிழ் மக்களைக் கால் கடுக்க நிற்க வைத்து திருப்பி அனுப்பியது. வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நடமாடும் சேவைகள் நடத்தி பிரச்சினைகளைத் தீர்த்து வைத்ததாகப் பெருமை பேசிய அரசாங்கம் ஏன் மட்டக்களப்பில் நடத்திய நடமாடும் சேவையில் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவில்லை. வரிசையில் காத்துக் கிடந்த மக்களிடம் குறைகளைத் தனித்தனியாக கேட்டறியாமல் வரிசையில் வைத்தே மகஜர்களை வாங்கிக் கொண்டு திருப்பி அனுப்பியது ஏன்?

இதற்குக் காரணம் தமிழர் தாயகத்தில் பெயருக்காக நடமாடும் சேவைகளை அரசாங்கம்நடத்த முற்பட்டதேஒழிய தமிழரின்குறையைதீர்த்துவைக்க அச்சேவை நடத்தப்படவில்லை. வழமையின்படி அச்சேவை நடத்தப்பட்டிருந்தால் பல மில்லியன் ரூபா சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நஷ்டஈடாக வழங்க வேண்டி வந்திருக்கும். இதனால் தமிழ்மக்கள் தமது இழந்து போன உயிர்களையும், உடைமைகளையும் மீட்க முடியாவிட்டாலும் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் பொருளாதார சுமையில் இருந்து சிறிதளவுதானும் விடுபட்டிருக்க முடியும். ஆனால் சிங்கள அரசு இதைச் செய்ய முன்வரவில்லை. திட்மிட்டே இன அழிப்பும், தமிழரின் பொருளாதார அழிப்பையும் மேற்கொள்ளும் சிங்கள அரசு எவ்வாறு தமிழரின் நெருக்கடி தீர உதவி புரிய முடியும்?

வழமை போலவே சிங்களவருக்கு ஒரு நீதி, தமிழருக்கு ஒரு நீதி என்ற ரீதியில் சிங்கள அரசாங்கம் இதனையும் கடைப்பிடித்துள்ளது. இது ஒன்றே இலங்கையில் உள்ள சகல பிரஜைகளுக்கும் சம நீதியும், சம உரிமையும் வழங்கப்படவில்லை என்பதை காட்டுவதற்குப் போதுமானதாகும். தமிழர் தாயகத்தில் நடமாடும் செயலகம் என்பதும் சேவை என்பதும் வெறும் அரசியல் நாடகமாகும் அல்லது சிங்களவர்களைக் குடியேற்ற உதவும் ஆக்கிரமிப்புத் திட்டமாகும்.

நூற்றாண்டிலேயே மிகவும் கடுமையாக வீசியதாகக் கூறப்படும் சூறாவளியினால் இது வரையில் 67பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் அநேகமானோர் புளோரிடா மாநிலத்தை சேர்ந்தவர்கள்.

சூறாவளியினால் வெள்ளப் பெருக்கு, கடும் உறைபனி, இடியுடன் கூடிய மழை ஆகியவற்றுடன் கூடிய வானிலை காணப்பட்டதாகவும் இதனால் பல இடங்களில் மின்சாரமும் கூறப்படுகின்றது.

சிக்காகோ, பொஸ்ரன், நியூயோர்க், அற்லான்றா விமான நிலையங்கள் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன. மக்களை வெளியே நடமாட வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

1888ஆம் ஆண்டிற்கு பின் அமெரிக்காவில் வீசிய கடும் சூறாவளி இதுவென தெரிவிக்கப்படுகின்றது.

நிலை ஏற்பட்டது.

தஞ்சாவூரிலிருந்து சென்னை சென்ற இந்த பஸ் இடையில் பழுதடைந்ததால் சென்னைக்கு இரண்டுமணி நேரம் தாமதித்து சென்றடைந்தது. இதனால் பாதிப்படைந்த பயணி ஒருவர் நுகர்வோர் குறைதீர்க்கும்குழுவிடம்முறையிட்டதையடுத்து அப்பயணிக்கு அந்த போக்குவரத்து நிறு

## எச்சரிக்கப் பட்டிருந்தது

பம்பாய் அல்லது அகமாபாத்தில் ரம்ழான் மாதத்தில் வகுப்புக் கலவரங்களை தூண்டக்கூடிய வகையில் பாகிஸ்தானின் உளவுப் பிரிவான ஐ. எஸ். ஐ திட்டமிட்டுள்ளதாக ஏற்கனவே மாநிலங்களின் தலைநகரங்களில் உள்ள பொலீஸ் தலைமையகங்களுக்கு தகவல் கிடைத்திருந்தது.

இத்தகவலை வெளியிட்டுள்ள ரைம்ஸ் ஒப் இந்தியா நாளிதழ் பெப்ரவரி மூன்றாம் வாரத்தில் இது குறித்து பொலீஸ் உயர் அதிகாரிகள் உஷார் படுத்தப்பட்டிருந்தனர் எனக் குறிப்பிட்டது.

# வாழைச்சேனை - புனானைக் காடுகள் அழிக்கப்படும்

## இராணுவ அதிகாரி தகவல்

கிழக்கில் புலிகளை முறியடிக்க அரசு நவீன ஆயுதங்கள் யுத்த விமானங்களை கொள்வனவு செய்தாலும் அம்மாகாணத்தை பொறுத்தவரையில் அடர்ந்த காடுகள் காணப்படுவதால் நவீனரக ஆயுதங்களை பாவிக்க முடிவதில்லை என்று கிழக்குமாகாண உயர் பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணத்தால் இராணுவ நடவடிக்கைகளைபரந்த அளவில் மேற்கொள்ளாது அன்றாடம் சிறிய சிறிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தொப்பிகல பகுதிக்கு படையினர் சென்றால் எம்மை புலிகள் கண்டு மாற்று நடவடிக்கைகள் எடுக்கின்றனர் எனவே நாம் புதிய யுக்தியை கையாளவுள்ளோம் எனக்குறிப்பிட்டுள்ள அந்த அதிகாரி பாதுகாப்பு காரணங்கள் கருதி அதை வெளியிட முடியாது எனத்தெரிவித்தார்.

வாழைச்சேனைக்கும் புனானைக்கும் இடையே உள்ள எட்டுமைல் தூரம் அடர்ந்த காடாக உள்ளது கடந்த காலங்களில் இந்த காட்டுப் பகுதியினுள் 72 படையினர் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி மடிந்துள்ளனர் எனவே வாழைசேனை புனானை பாதையின் இருபக்கங்களிலும் உள்ள காடுகளை சிறிது தூரத்திற்கு புல்டோசர் மூலம் சுத்திகரிக்கவுள்ளோம் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்

### மாதாந்த உதவிப்பணம்

[வடமராட்சி]

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இது வரை மார்கழி மாத பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறாதவர்கள் அவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென சமூக சேவை உத்தியோகத்தர் திரு கிருபாகரன் தெரிவித்துள்ளார். [யோ]

## சந்தை விலைவிபரம் (15-03-1993)

| தொ. இல. | பொருட்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | குத்தரிசி | கி.கி | 41,60 | 52.60 | 41.30 | 44.15 | 43.75 | 46.50 | 43.00 | 44.00 |
| 02. | கோதுமைமா | ,, | 20.00 | 21.80 | 22.00 | 20.60 | 19.00 | 26.00 | 23.30 | 23.00 |
| 03. | சீனி | ,, | 55.00 | 53.65 | 56.00 | 47.60 | 57.00 | 55.00 | 58.30 | 60.00 |
| 04. | கத்தரி | ,, | 19.00 | 25.30 | 14.60 | 20.00 | 16.00 | 20.00 | 25.30 | 20.00 |
| 05. | வெண்டி | ,, | 25.00 | 32.30 | 18.60 | 20.00 | 16.50 | 15.00 | 24.65 | 22.60 |
| 06. | பாகல் | ,, | 17.60 | 23.65 | 13.60 | 20.00 | 29.00 | 21.00 | 27.30 | 30.00 |
| 07. | புடோல் | ,, | 14.50 | 20.30 | 15.30 | 14.30 | 15.00 | 12.00 | 14.65 | — |
| 08. | பயற்றங்காய் | ,, | 13.60 | 24.00 | 13 00 | 19.30 | 15 00 | 20.00 | 23.65 | 18.30 |
| 09. | தக்காளி | ,, | 24 15 | 35.65 | 22.60 | 22.00 | 21.50 | 25.00 | 23.80 | — |
| 10. | வாழைக்காய் | ,, | 16.30 | 29.00 | 23.00 | 24.60 | 22.50 | 20.65 | 22.65 | 22.00 |
| 11. | பீற்றூட் | ,, | 9.00 | 13.60 | 7.60 | — | — | 14.00 | 15.00 | 10.30 |
| 12. | தேங்காய் | ஒன்று | 27.30 | 36.60 | 30.50 | 27.00 | 29.90 | 31.50 | 24.30 | 17.15 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 17.50 | 22.00 | 13.60 | 21 00 | 15.00 | 20.00 | 19.30 | 15.00 |
| 14. | எலுமிச்சை | ,, | 57.50 | 75.00 | 48.30 | 61.60 | 65.00 | 45.00 | 53.30 | 52.50 |
| 15. | வெங்காயம் | ,, | 10.50 | 17.60 | 9.00 | 8.30 | 9.00 | 9.00 | 8.15 | 11.80 |
| 16. | கப்பல்வாழைப்பழம் | ,, | 30.00 | 35.00 | 35.00 | 33.00 | 30.00 | 40.00 | 30.00 | — |
| 17. | இறால் | ,, | 110.00 | 97.50 | 73.30 | 61 60 | 100.00 | 120.00 | 80.00 | 40 00 |
| 18. | பெரியமீன் | ,, | 160.00 | 112.50 | 70.00 | 90.80 | 115.00 | 141.65 | 108.30 | 115.00 |
| 19. | சிறியமீன் | ,, | 150.00 | 66.25 | 120.00 | 61.10 | — | 65.00 | 59.30 | — |
| 20. | முட்டை | ஒன்று | 7.25 | 7.30 | 7.50 | 7.80 | 8.50 | 9.00 | 8.65 | 6.00 |

தகவல்- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

## நீண்ட கடல்மார்க்கமாக மன்னாருக்கு பயணம்

(வவுனியா)

மன்னார் மாவட்டத்தில்சிறிலங்கா இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் மக்கள் வவுனியா ஊடாக புத்தளம் சென்று மன்னார் தீவுக்கான போக்குவரத்தை மேற்கொள்ளுகின்றனர்

கடல் மார்க்கமாக படகுப் பயணத்திற்கு சிறிலங்கா இராணுவம் தடை விதித்ததை அடுத்துமுக்கியதேவையுடைய மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் இந்த நீண்ட தூர பயணத்தை மேற்கொள்கின்றனர்

மன்னார்த் தீவில் உள்ள மக்கள்கற்பிட்டி ஊடாக புத்தளம் வந்து வவுனியா வந்தடைகின்றனர்.

இராணுவத்தின் இந்தகடல் பயணப்பாதை தடை காரணமாக பொது மக்கள் நூற்றுக் கணக்கான கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது (தி)

## இலங்கை இனப்பிரச்சினை பி.பி.ஸி. தலையிடுகின்றது

### கொழும்பு வாசிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் பி. பி. ஸி. உலகசேவை மிக அதிகமாகவே தலையிடுகின்றது எனக் கொழும்பு வாசிகள் சிலர் அந்நிறுவனம் மீது கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி பி.பி. ஸி. உலகசேவைக்கு ஜனாதிபதி பிரேமதாஸ 'ஃபோன் இன்' என்ற நிகழ்ச்சியில் நேயர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த மறுதினம் கொழும்பு பிரிட்டிஷ் கவுன்ஸிலில் பி. பி. ஸி. யின் செய்தி ஆசிரியர்கள் நால்வர் மக்கள் கருத்தறியும் கூட்டம் ஒன்றைக் கூட்டியிருந்தனர். இக்கூட்டம் தொடர்பாக பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரங்களைக் கண்ணுற்றவர்களில் 75 கொழும்பு வாசிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவ்வாறு கலந்து கொண்டவர்களில் பலரே பி. பி. ஸி யின் போக்கு குறித்து சர்ச்சை எழுப்பினர். எனினும் சிலர் இத்தகைய நிகழ்ச்சி மூலமே எதிர்த்தரப்பு கருத்துக்களையும் அறியக் கூடியதாக இருக்கும் என வலியுறுத்தினர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பி. பி. ஸி கிழக்கு சேவைத் தலைவர் வில்லியம் குரோலி இறுதியில் கருத்துத் தெரிவிக்கையில் 'ஒலிபரப்பின் நோக்கம் தம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என மக்கள் அறிவதற்கேயாகும்' என சுட்டிக் காட்டினார்.

ஈழநாதம்

# சர்வோதயத்திலிருந்து பிரிந்து 'சேவாலங்கா' உதயம்

(வவுனியா)

சர்வோதயத்தில் பிளவு ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்த நிறுவனத்தால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டுவந்த வேலைத் திட்டங்கள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.

சர்வோதயத் தலைவர் ஏ. ரி. ஆரியரட்ணவின் தாய்வழி மருமகனான கரசகுமாரநவரட்ண என்பவர் இந்நிறுவனத்திலிருந்து பிரிந்துசென்று தற்போது புதிய நிறுவனம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

சேவாலங்கா என்ற பெயரில் சர்வதேச நாடுகளில் நிதிஉதவிகளைப் பெற்று இலங்கையில் மாவட்டங்கள் தோறும் கிளை அலுவலகங்கள் செயல்படவைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வவுனியாவிலும், அம்பாறையிலும் கிளை அலுவலகங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன,

முன்னர் சர்வோதயத்தில் பணிபுரிந்த ஊழியர்கள் பலர் அதிலிருந்து பிரிந்து சேவாலங்கா நிறுவனத்தில் இணையத்தொடங்கியுள்ளனர். (தி)

## ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் முஸ்லிம் குடியேற்றம்

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் முஸ்லிம் மக்கள் குடியேற்றம்செய்யப்படுகின்றனர். சூடுவெந்த புலவு, புளித்தறிச்சபுளியங்குளம் ஆகிய இரு கிராமங்களிலும் முஸ்லிம் மக்கள் குடியேறுகின்றனர்.

இராணுவம் நிலைகொண்டுள்ள இந்தப் பகுதிகளை துப்புரவு செய்து வீடுகள் அமைப்பதில் முஸ்லிம்கள் ஈடுபட்டுள்ளனர். இராணுவம் இவர்களுக்குரிய பாதுகாப்பும், உதவிகளும் வழங்கி வருகிறது. [தி]

## இலங்கை மின்சாரசபை தனியார் மயமாகும்

(கொழும்பு)

1994 ஆம் ஆண்டிற்கு முன்பாக மின்சார சபையையும் தனியார் மயமாக்க அரசு முடிவு செய்துள்ளது. சபையின் தற்போதைய நிதி நிலை மோசமாக உள்ளதாலேயே தனியார் மயமாக்கப்படுவதாக அரசு கூறுகின்றது.

அரசு மின்சார சபைக்கு 100 கோடி ரூபா வரை செலுத்த வேண்டியுள்ளதாகவும் அரசு நடத்தும் பொது நிகழ்ச்சிகளுக்கு மின் வழங்கியதன் மூலம் 80 கோடி ரூபா பாக்கி உள்ளதெனவும் மின்சாரசபையின் தொழிற்சங்க முன்னணித் தலைவர் ரஞ்சித் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

அரசின் இந்த நிலுவை காரணமாக மின்சாரசபை வங்கிகளிலிருந்து 200 கோடி ரூபாவைக் கடனாக பெற்று அதற்கு வட்டி கட்டுகின்றது என அவர் கூறியுள்ளார்.

## தடுப்பு மருந்துகள் மந்திகைக்கு கிடைத்தன

(நெல்லியடி)

விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்து, ஏற்பு வலி தடுப்பு ஊசி மருந்து போன்றவையும் ஒரு தொகுதி எக்ஸ்றே கதிர் பிலிம்ஸ்களும் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு வந்திருப்பதாக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

## ஐ. தே. கவில் சேர ரெலோ எம்.பி முயற்சி

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரும், தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவருமான கோவிந்தன் கருணாகரன் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வது பற்றி ஆலோசித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### சுகாதார பயிற்சி

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான உளச்சுகாதாரப் பயிற்சி, இன்றைய சூழ்நிலையில் பாலர் பாடசாலையின் சிறார்களின் உளத்தாக்கங்களையும் அதனை அடையாளங் காண்பது எப்படி என்பதையும் கருப் பொருளாகக் கொண்டு இப்பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (24)

### பொருளியல் ஆய்வு

யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட (1990-91) பொருளியல் சிறப்பு, வர்த்தக மற்றும் முகாமைத்துவ கற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர்கள் சமூக பொருளாதார ஆய்வினை மேற்கொள்ளுமாறு பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வே. இளங்குமரன் அவர்கள் பணித்துள்ளார்,

இவ் ஆய்வுத்திட்டம் யாழ். மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட இருப்பதால் சகல பிரதேச செயலக கிராம சேவையாளர்கள் மாணவர்களுக்கான சகல உதவிகளையும், புள்ளி விபரங்களையும் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இவ் ஆய்வினை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (05)

## போசாக்கு கருத்தரங்கு

(தொல்புரம்)

சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பகுதியினரால் சுகாதாரக் கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி கருத்தரங்கு சுழிபுரம் மத்தி கிருஷ்ணா சனசமூக நிலையத்தில் இன்று காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளதென சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. க. கந்தையர் தெரிவித்துள்ளார்.

மேலும் இக் கருத்தரங்கில் போஷாக்கு உணவும், உடல் நலன் பேணல் பற்றியும் சுழிபுரம் மத்தி, மேற்கு குடும்ப நல சேவையாளர்கள் திருமதி கமலாவதி, திருமதி அமிர்தவல்லி உட்பட மற்றும் பலர் உரையாற்றவுள்ளனர். (41

# பயங்கரவாத நாடாக பாகிஸ்தானை அறிவிக்குக

## இந்திய மத்திய அரசிடம் கோரிக்கை

(டில்லி)

பம்பாய் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக பாகிஸ்தானின்முப்படைகளின் உளவு விசாரணை அமைப்பு சம்பந்தப்பட்டிருந்தால் மறைமுகப் போர் ஒன்று நாட்டில் மூள காரணமாக இருக்கும் என்று இந்திரா காங்கிரஸ் கூறுகின்றது.

இத்தகைய நிலையில் பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாக அறிவிக்க அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி செய்தி தொடர்பாளர் திரு. காட்டில் கூறினார். சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக எல்லா நாடுகளும் போராடவேண்டும் என்று புதுடில்லியில் செய்தியாளரிடையே பேசுகையில் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஒருமைப்பாடு, பொருளாதாரம் என்பன இக்குண்டுவெடிப்பினால் பெரியதொரு சவாலை எதிர்கொண்டிருக்கும்இத்தருணத்தில் நாடு முழுவதும் காட்டிய ஒற்றுமை பெருமிதம் அளிக்கின்றது என அவர் தெரிவித்தார். உளவு விசாரணை அமைப்பு ஐ. பி. உளவு ஆராய்ச்சிப் பிரிவு, றோ உட்பட எல்லா ஏஜென்சிகளும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. சில முக்கிய தகவல்கள் கிடைத்திருக்கின்றன என அவர் குறிப்பிட்டார். இங்கு வெடித்த வெடிகுண்டுகளையிட்டு மகாராஷ்ட்ரா மக்கள் பீதி அடையவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார்.

### குமணவில் விடைத்தாள்கள்

(யாழ்ப்பாணம்)

கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற ஆங்கில ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சையின் யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகளின் விடைத்தாள்கள் நேற்று ''குமண'' கப்பலில் திருக்கோணமலைக்குஎடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மேலும் இவ் விடைத்தாள்களை மேற்படி கப்பலில் செல்லும் யாழ். கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவரினால் திருக்கோணமலையில் இருந்து கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்படும் என தெரியவருகின்றது. (பா)

## போரூட் பிரதிநிதிகள் நாளை யாழ். வருவர்

(வடமராட்சி)

போரூட் வதிவிடப் பிரதிநிதிகள் இருவர் நாளை யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவிருப்பதாக போரூட் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ் அதிகாரிகள் கொண்ட குழு இங்கு ஒருவாரம் தங்கியிருக்கும்என்றும்அக்காலத்தில் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் செயற்பாடுகளைப் பார்வையிடுவதோடு, அரசாங்க அதிபர், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் நிறுவனங்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போரூட் நிறுவன வதிவிட பிரதிநிதி திரு. பி. போல் ஹன்றி கெயிலன், திட்டப் பணிப்பாளர் திரு. எம். எவ். மரிக்கார் ஆகியோரே நாளை இங்கு வரவுள்ளனர். இந்நிறுவனத்தில் சுழிபுரப்பகுதி திட்ட இணைப்பாளர் திரு. க. கணேசலிங்கம் அண்மையில் இங்கு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (யோ)

## பல்கலை. வெட்டுப்புள்ளி அனுப்புவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

1992-93 கல்வியாண்டு தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் வெட்டுப்புள்ளி (Cut-Out) காலம் தாழ்த்தியே வெளியிடப்படும் எனப் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

1991-ம் ஆண்டில் நடைபெற்ற க. பொ. த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் மொத்தப் புள்ளியின் மீள்பரிசீலனை புள்ளிகள் அனுப்பத் தாமதம்ஏற்படும் என்றும் இதனாலேயே வெட்டுப் புள்ளிகள் அனுப்புவதில் தாமதமேற்படுவதாகதெரிவிக்கப்படுகிறது. (05)

## சமஷ்டி குறித்து விவாதிக்க ஐ. தே. க. மறுப்பு

(கொழும்பு)

மேல் மாகாண சபையில் லிபரல் கட்சியினரால் கொண்டு வரப்பட்ட சமஷ்டி அமைப்பு பற்றி விவாதிக்கக் கோரும் பிரேரணை ஐக்கிய தேசியக் கட்சியினரால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து லிபரல் கட்சியின் செயலாளர் றோகான் எதிரிசிங்க செய்தியாளர்களிடம் பேசும்போது கூறுகையில் அரசியல் அமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்திலுள்ள குறைபாடுகள் பற்றியும், சமஷ்டி முறையிலான அரசமைப்பு பற்றியும் விவாதம் நடத்த பிரேரணையில்கோரப்பட்டதாகவும், இந்தப் பிரேரணைக்கு முதலில் ஆதரவு தெரிவித்த இடதுசாரிகள் நிராகரிக்கப்பட்ட போது மௌனம் சாதித்தனர் எனவும் தெரிவித்தார்.

### கருத்தரங்குகள்

இரட்டைச் சூட்டு அடுப்பின் பயன்பாடு பற்றியும், பாவனை முறை பற்றியும் பாடசாலைகள் தோறும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்டத்தில் நடைபெறும் கிராமிய உற்பத்திக் குழுக்களின் கூட்டங்களிலும், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கப் பணிமனைகள் ஆகியவற்றில் ஏற்பாடு செய்

### பெறுமதிகூடிய முத்திரைகள் வந்தன

அதிகூடிய பெறுமதியான முத்திரைகள் யாழ் பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் பல மாதங்களாக 1000, 500, 200 ரூபா பெறுமதியான முத்திரைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவியது தெரிந்ததே

தற்போது மேற்படி மிகப் பெறுமதியான 3 மில்லியன்

## கிளாலி பகுதியை நோக்கி பீரங்கி, ஷெல் தாக்குதல்

(தென்மராட்சி)

சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப்படகுகள் கிளாலி பகுதியை நோக்கி நேற்று அதிகாலை முதல் அகோர பீரங்கித்தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்று அதிகாலை 4 மணி முதல் 6 மணிவரை கிளாலி கடற்பரப்பில் தரித்து நின்ற பீரங்கிப்படகு ஒன்றே இப் பீரங்கித் தாக்குதலை நடத்தியது.

இக் குண்டுகள் மாசார், ஆலங்கேணிப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து மாலை 4 மணியளவில் பூநகரி இராணுவ முகாமிலிருந்தும் இதேபகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. இவற்றால் ஏற்பட்ட சேதவிபரங்கள்தெரியவில்லை. (86)

## பவள் கவசவாகனம் கண்ணி வெடியில் சிக்கியது

### 3 அதிரடிப்படை காயம்

அம்பாறை மாவட்டத்தில் லகுகல என்றஇடத்தில் விசேட அதிரடிப்படையினர் சென்ற

பெற்ற இச்சம்பவத்தில் கவசவாகனம் கடும் சேதத்திற்குள்ளானது. காயமடைந்த சப்

கோடி ரூபா வரை செலுத்த வேண்டியுள்ளதாகவு'' அரசு நடத்தும் பொது நிகழ்ச்சிக

ரூபாவைக் கடனாக பெற்று அதற்கு வட்டி கட்டுகின்றது என அவர் கூறியுள்ளார்.

முகாமைத்துவ கற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர்கள் சமுக பொருளாதார ஆய்வினை மேற்கொள்ளுமாறு பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வே. இளங்குமரன் அவர்கள் பணித்துள்ளார்,

இவ் ஆய்வுத்திட்டம் யாழ். மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட இருப்பதால் சகல பிரதேச செயலக கிராம சேவையாளர்கள் மாணவர்களுக்கான சகல உதவிகளையும், புள்ளி விபரங்களையும் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இவ் ஆய்வினை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (05)

அமைப்பு பற்றி விவாதிக்கக் கோரும் பிரேரணை ஐக்கிய தேசியக் கட்சியினரால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து லிபரல் கட்சியின் செயலாளர் றோகான் எதிரிசிங்க செய்தியாளர்களிடம் பேசும்போது கூறுகையில்

மைப்பு பற்றியும் விவாதம் நடத்த பிரேரணையில்கோரப்பட்டதாகவும், இந்தப் பிரேரணைக்கு முதலில் ஆதரவு தெரிவித்த இடதுசாரிகள் நிராகரிக்கப்பட்ட போது மௌனம் சாதித்தனர் எனவும் தெரிவித்தார்.

## தடுப்பு மருந்துகள் மந்திகைக்கு கிடைத்தன

(நெல்லியடி)

விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்து, ஏற்பு வலி தடுப்பு ஊசி மருந்து போன்றவையும் ஒரு தொகுதி எக்ஸ்றே கதிர் பிலிம்ஸ்களும் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு வந்திருப்பதாக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

## ஐ. தே. கவில் சேர ரெலோ எம்.பி முயற்சி

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரும், தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவருமான கோவிந்தன் கருணாகரன் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வது பற்றி ஆலோசித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### இருமாணவிகள் சித்தி

(கொழும்புத்துறை)

1991 ஆம்ஆண்டு நடாத்தப்பட்ட 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தில் இருந்து தோற்றிய செல்விஹைறபிபிரேமிளா 189 புள்ளிகளையும், செல்வி பா. மேனகா 154புள்ளிகளையும் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர்

## வவுனியா மாவட்டத்தில் மண்ணெண்ணெய் மோசடி

[வவுனியா]

வவுனியா மாவட்டத்தில் இராணுவம் அற்ற பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கக்கிளைகளுக்குரிய பெருமளவிலான மண்ணெண்ணெய் மோசடி செய்யப்பட்டுள்ளமை அம்பலத்திற்கு வந்துள்ளது.

வவுனியா தமிழ் பிரிவு கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்தின் பெயரில் பன்னிரெண்டு கிளைகளுக்குரிய சுமார் இருநூறு பீப்பா மண்ணெண்ணெய்மோசடி செய்யப்பட்டுள்ளது என்று ஈழநாதத்திற்கு தகவல்கிடைத்துள்ளது.

வழமைபோலவே கூட்டுறவுச் சங்கத்தின் பதிவைப் பிரயோகித்து கொலனாவ எண்ணெய்க்குதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து லொறிகளுக்குரிய மண்ணெண்ணெயை கூட்டுறவுச் சங்கமேலிடத்திற்கு தெரியாமல் மோசடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாத விநியோகத்திற்குரிய இந்த மண்ணெண்ணெயை ஏற்றிவந்த மோசடிக்காரர் ஈரற்பெரியகுளம் சிறிலங்கா இராணுவ முகாமில் வைத்து கூட்டுறவுச் சங்கத்தின் பெயரில் பதிவு செய்து வடபகுதிக்கு எடுத்து வந்துள்ளனராம்.

இதை அறியாத சங்க நிர்வாகம் ஜனவரி மாதத்திற்குரிய மண்ணெண்ணெயை இராணுவ சோதனை முகாமைத் தாண்டி இராணுவம் அற்ற பகுதிக்கு எடுத்துவர முயற்சித்தபோது இராணுவத்தால் தடுக்கப்பட்டதாம். ஏலவே இந்த எண்ணெய் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று இராணுவத்தால் காரணம் சொல்லப்பட்டுள்ளதாம்.

தற்போது வவுனியா தமிழ் பிரிவு கூட்டுறவுச் சங்க நிர்வாகம் இது விடயத்தில் குழம்பிப் போயுள்ளதுடன். சம்பந்தப்பட்ட அமைச்சு வட்டாரங்களுக்கு அறிவித்துள்ளதாம்.

இம்மோசடிக்கு அரசாங்க அமைச்சு ஒன்றிற்கு நெருக்கமான ஒருவரே காரணம்என்று தெரிவிக்கப்படுகிறது. இம் மோசடிபற்றி தற்போது விசாரணை இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தி

### கருத்தரங்குகள்

இரட்டைச் சூட்டு அடுப்பின் பயன்பாடு பற்றியும், பாவனை முறை பற்றியும் பாடசாலைகள் தோறும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்டத்தில் நடைபெறும் கிராமிய உற்பத்திக் குழுக்களின் கூட்டங்களிலும், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கப் பணிமனைகள் ஆகியவற்றில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்குகளிலும் இது தொடர்பான விளக்கவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### மன்னார்

விட்டனர். இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

இத்தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ரி-56-1 துப்பாக்கி — 2
- ★ 84 5 துப்பாக்கி — 1
- ★ ரி-56 ரவைக்கூடுகள் — 8
- ★ 845 ரவைக்கூடுகள் — 2
- ★ நடுத்தர ரவைகள் —235
- ★ 5 56 மி மீ ரவைகள்—125
- ★ ஏ.கே. கோல்சர் — 03

### மேஜர்

டவர், இந்திய இராணுவத்தினர் தமிழ் மண்ணிலிருந்து வெளியேறிய சில மாதங்களின் பின்னர் தொடங்கிய இரண்டாவது ஈழப் போரின் ஆரம்பத்தில் நிகழ்ந்த கொண்டச்சி, கொக்காவில் முகாம் தகர்ப்புகளிலும், 1991 ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஆனையிறவு முகாம் தாக்குதல் நடவடிக்கையிலும் பெரும் பங்காற்றியவர். 1992 ஆம் ஆண்டில் நிகழ்ந்த கட்டைக்காடு மினி முகாம் ஆயுதக்கிடங்கைக் கைப்பற்றிய வெற்றித் தாக்குதலில் மிகத் திறமையாகச் செயற்பட்டுத் தலைவரிடமிருந்து பரிசினையும் பெற்றவர். அதேஆண்டில் நிகழ்ந்த கட்டுப்பொத்தை, வீரவெல, கந்துறுவெல ஆகிய மூன்று முகாம்கள் மீதான தாக்குதல்களிலும், கொக்குத்தொடுவாய்க்கும் -கோட்டைக்கேணிக்கும் இடையில் நாற்பத்தாறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்ட பதுங்கித் தாக்கிய சம்பவத்திலும் இவர் முக்கிய பங்கேற்றுக் கொண்டவர்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

### பெறுமதிகூடிய முத்திரைகள் வந்தன

அதிகூடிய பெறுமதியான முத்திரைகள் யாழ் பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் பல மாதங்களாக 1000, 500, 200 ரூபா பெறுமதியான முத்திரைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவியது தெரிந்ததே

தற்போது மேற்படி மிகப் பெறுமதியான 3 மில்லியன் ரூபாவிற்கான முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன.

### கொழும்பில்

காரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உடைமைகளுக்கும், பொது மக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் சக்திகள் பற்றிய தகவல்களைத் தந்து உதவுமாறு பொலிசார் பொதுமக்களைக் கோரியுள்ளனர்.

முக்கிய இராணுவ அதிகாரிகள், மூத்த அரச உத்தியோகத்தர் மற்றும் அரசியல்வாதிகள் மீது புலிகள் தாக்குதல் மேற்கொள்ள உள்ளார்கள் என்று புலனாய்வு அறிக்கையை மேற்கோள் காட்டி பாதுகாப்புப் படை சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலதிகப் பாதுகாப்பு முக்கிய நபர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதோடு முக்கிய அரச திணைக்களங்களிலும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பில் ரோந்து நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை அரச சார்பு தமிழ் குழுக்களும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன

### தேர்தலுக்கு

விக்கிரம பெரேரா, ஜனாதிபதியின் சட்டத்தரணி கே. என். சொக்ஸி ஆகியோரைக் கொண்டதாக இக்கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

மார்ச் 10-ம் திகதிய கூட்டத்தில் பின்பு ஜனாதிபதி செயலகத்தில் கூடிய இக்கமிட்டியினர் மாகாணமுதலமைச்சர்கள் ஆறு பேருடனும் கலந்தாலோசனை நடத்தியுள்ளனர். இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் நியமிக்கப்பட்ட மாகாண ஆளுநர்களும்அழைக்கப்பட்டிருந்தனர்.

## பீரங்கி, ஷெல் தாக்குதல்

(தென்மராட்சி)

சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப்படகுகள் கிளாலி பகுதியை நோக்கி நேற்று அதிகாலை முதல் அகோர பீரங்கித்தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்று அதிகாலை 4 மணி முதல் 6 மணிவரை கிளாலி கடற்பரப்பில் தரித்து நின்ற பீரங்கிப்படகு ஒன்றே இப் பீரங்கித் தாக்குதலை நடத்தியது.

இக் குண்டுகள் மாசார், ஆலங்கேணிப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து மாலை 4 மணியளவில் பூநகரி இராணுவ முகாமிலிருந்தும் இதேபகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. இவற்றால் ஏற்பட்ட சேதவிபரங்கள்தெரியவில்லை. (86)

## பவள் கவசவாகனம் கண்ணி வெடியில் சிக்கியது

### 3 அதிரடிப்படை காயம்

அம்பாறை மாவட்டத்தில் லகுகல என்றஇடத்தில் விசேட அதிரடிப்படையினர் சென்ற பவள் கவசவாகனம் கண்ணி வெடியில் சிக்கியதில் அதிரடிப் படையின் சப் இன்ஸ்பெக்டர் உட்பட 3 அதிரடிப்படையினர் காயமடைந்ததாக பொலீஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் கவச வாகனம் கடும் சேதத்திற்குள்ளானது. காயமடைந்த சப் இன்ஸ்பெக்டர் சியாம்பலாந்துவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனைய இருவர் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு மேலதிக சிகிச்சைக்குகொண்டு செல்லப்பட்டனர் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## வடபகுதி தபால்கள் உடைக்கப்படமாட்டாதாம்

வடபகுதிக்கான தபால்கள் இனிமேல் எக்காரணம் கொண்டும் உடைக்கப்படமாட்டாதென சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. சிறில்ரணதுங்கா தமக்கு உறுதி அளித்துள்ளதாக வட மாகாண பிரதம தபால் அத்தியட்சகர் திரு. சேதுகாவலர் தெரிவித்தார்.

கடந்த பல மாதங்களாக வெளிநாட்டுத் தபால்கள் அனைத்தும் கொழும்பு கடற்படை முகாமில் வைத்து உடைக்கப்பட்டு பரிசீலனைக்குட்படுத்தப்பட்டது தெரிந்ததே.

அரசின் இத்தகைய செயலைக் குறித்து திரு. சேதுகாவலர் அண்மையில் கொழும்பு சென்று நேரடியாக உரிய அதிகாரிகளிடம் தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்தே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேற்கண்ட உறுதிமொழியை அளித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணம் வரும் அனைத்து கப்பல்களிலும் தபால் பொதிகள் அனுப்பப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

### 1164 தபால்

ஏற்றப்பட்டு விட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கப்பலில் 404 பதிவுத் தபால் பொதிகளும் 350 வெளிநாட்டுத்தபால் பொதிகளும், 410 சாதாரண தபால் பொதிகளும் கடந்த 10 ஆம் திகதியே ஏற்றப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

## திரு. இராஜா சிவப்பிரகாசம்

(B.Sc)

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட. சென். கென்றிஸ் கல்லூரி இளைப்பாறிய உப அதிபரும் நைஜீரியாவில் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றியவருமான இராஜா சிவப்பிரகாசம் அவர்கள் 13 03-1993 அன்று அவுஸ்ரேலியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பவானி (சிங்கப்பூர்), மாலதி, தேவகி, மோகன்ராஜ் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா) கோபால் ராஜ் (பொறியியலாளர் இந்தோனேசியா) சத்தியராஜ் (மாணவர் அவுஸ்ரேலியா பல்கலைக்கழகம்) அனந்தி (சிங்கப்பூர்) வசந்தி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராஜா செல்வநாயகம் (நிறைவேற்றுப் பொறியியலாளர் இலங்கை சீமெந்துக் கூட்டுஸ்தாபனம்) திருமதி சிவசாமி (கொட்டடி), திருமதி தியாகராஜா (பண்ணாகம், திருமதி சிறீகரன் (தொல்புரம்), திருமதி சிங்கம் (மலேசியா) ஆகியோரின் சகோதரரும் ஜெயபாலா (பொறியியலாளர் சிங்கப்பூர் கடற்படை) யோகராஜா (ஜே.பி.உரும்பராய் விரிவுரையாளர் தொழில் நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம்.) செல்வராஜா (B A ஆசிரியர் வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதனி, ரஜனி சாளினி (சிங்கப்பூர்), டினேஷ், ஷாந், அஜீவனா, அஷ்மீர் ஆகியோரின் பேரனாரும் ஆவார்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பூம்புகார்,
சித்தன்கேணி.

தகவல்
இராஜா செல்வநாயகம்
(சகோதரர்)

(சி/6211)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 16-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8645

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-5217, 26-0691, 24-0576, 24-2680, 26-7252
27-2034, 26-6062, 27-1141, 26-0525, 28-9449
41-5178, 27-0994, 41-5417, 42-3267, 26-0032
26-3356, 43-0916, 42-3965, 27-8164

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-9416, 24-4207, 26-1376, 24-9549, 26-6026
41-8445, 28-1862, 27-9492, 42-2862, 27-8160
24-6293, 42-3329, 42-9112, 42-6119, 41-8823.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.